www.Padasalai.Net www.CBSEtips.in



V11Eco

**விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்**
**அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2022**

**வகுப்பு 11**

**பொருளியல்**

நேரம்: 3.00 மணி | மொத்த மதிப்பெண்கள்: 90

**பகுதி - அ**

**I. பொருத்தமான விடையை தெரிவு செய்யவும்:** **20×1=20**

1) மனிதனுடைய வாழ்க்கையின் அன்றாட நடவடிக்கைகளை பற்றி பொருளியல் ஆராய்கிறது என்று கூறியவர்
அ) ஆடம் ஸ்மித் ஆ) இலயனல் ராபின்ஸ்
இ) ஆல்ஃபிரட் மார்ஷல் ஈ) சாமுவேல்சன்

2) பற்றாக்குறைப் பொருளாதார இலக்கணத்தின் ஆசிரியர் யார்?
அ) ஆடம் ஸ்மித் ஆ) மார்ஷல் இ) ராபின்ஸ் ஈ) ராபர்ட்சன்

3) இறுதிநிலைப் பயன்பாடு பூஜ்யமாக இருக்கும்போது மொத்தப் பயன்பாடு
அ) குறைவாக ஆ) உச்சமாக இ) பூஜ்ஜியமாக ஈ) எதிர்மறையாக

4) தகுவிலை ரூ. 250 ஆகவும் மற்றும் உண்மைவிலை ரூ. 200 ஆகவும் உள்ளது. நுகர்வோர் எச்சத்தைக் காண்க.
அ) 375 ஆ) 175 இ) 200 ஈ) 50

5) ஒரு நிறுவனத்தின் உள்ளீடு வெளியீடுகளுக்கு இடையே உள்ள இயல்பான தொடர்பைத் தருவது எது?
அ) நுகர்வு சார்பு ஆ) உற்பத்தி சார்பு இ) சேமிப்பு சார்பு ஈ) முதலீட்டு சார்பு

6) பொருளின் விலைக்கும் அளிப்பிற்கும் இடையே உள்ள தொடர்பு
அ) எதிர்மறை ஆ) நேர்மறை இ) பூஜ்யம் ஈ) அதிகரிக்கும்

7) பணச்செலவை ............ செலவு என்றும் அழைக்கலாம்.
அ) வெளியுறு ஆ) உள்ளுறு இ) சமூக ஈ) உண்மை

8) நீண்டகால சராசரி செலவுக்கோடு ............ கோடு என அழைக்கப்படுகிறது.
அ) தேவைக் ஆ) திட்ட இ) உற்பத்தி ஈ) விற்பனை

9) எப்போது நிறுவனம் இலாபம் பெறமுடியும்?
அ) TR < TC ஆ) TR > MC இ) TR > TC இ) TR = TC

10) எந்த வகை அங்காடியில் போட்டியே இராது?
அ) நிறைவு போட்டி ஆ) முற்றுரிமை
இ) முற்றுரிமை போட்டி ஈ) சில்லோர் முற்றுரிமை

11) எச்ச உரிமை கூலிக்கோட்பாட்டை எடுத்துரைத்தவர்
அ) கீன்ஸ் ஆ) வாக்கர் இ) ஹாலே ஈ) நைட்

12) உழைப்பாளருக்கான வெகுமதி ............
அ) வாரம் ஆ) கூலி இ) இலாபம் ஈ) வட்டி

13) எந்த ஆண்டில் இந்திய மக்கள் தொகை நூறுகோடியைத் தாண்டியது?
அ) 2000 ஆ) 2001 இ) 2005 ஈ) 1991

14) திருவள்ளுவரின் பொருளாதாரக் கருத்துகள் குறிப்பாகக் கூறுவது
அ) செல்வம் ஆ) வறுமை சமுதாயத்தின் சாபம்
இ) வேளாண்மை ஈ) மேற்காண் அனைத்தும்

15) திட்டக்குழு அமைக்கப்பட்ட ஆண்டு
அ) 1950 ஆ) 1955 இ) 1960 ஈ) 1952

16) மனித மேம்பாட்டுக் குறியீட்டெண்ணை உருவாக்கியவர்
அ) ஜவர்கர்லால் நேரு ஆ) M.K. காந்தி
இ) அமர்த்தியா குமார்சென் ஈ) தாகூர்

17) புதிய பொருளாதாரக் கொள்கை கீழ்கண்டவற்றுள் எதனை உள்ளடக்கியது?
அ) வெளிநாட்டு முதலீடு ஆ) வெளிநாட்டு தொழில்நுட்பம்
இ) வெளிநாட்டு வர்த்தகம் ஈ) இவை அனைத்தும்

18) "இந்திய விவசாயி கடனாளியாக பிறந்து, கடனாளியாக வாழ்ந்து, கடனாளியாக இறந்து, கடனயே சந்ததிக்கு விட்டுச் செல்கிறான்" இச்சொற்றொடரைக் கூறியவர் யார்?
அ) ஆடம் ஸ்மித் ஆ) காந்தி
இ) அமர்தியா சென் ஈ) சர் மால்கம் டார்லிங்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in





19) SPIC அமைந்துள்ள இடம்

அ) சென்னை ஆ) மதுரை இ) தூத்துக்குடி ஈ) புதுக்கோட்டை

20) பொருளியலில் கணிதத்தை முதன்முதலாக பயன்படுத்தியவர் ............

அ) சர் வில்லியம் பெட்டி ஆ) ஜியோவானி செவா

இ) ஆடம் ஸ்மித் ஈ) இர்விங்பிஷர்

**பகுதி - ஆ**

**II. எவையேனும் 7 வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்கவும். 7×2=14**

**வினா எண் 30 கட்டாயம் விடையளிக்கவும்.**

21) பொருளியல் என்றால் என்ன?

22) சமநோக்கு வளைகோடுகள் என்றால் என்ன?

23) உற்பத்திக் காரணிகளை வகைப்படுத்து.

24) வெளியுறு செலவு - வரையறு.

25) உபரி சக்தி - விளக்குக.

26) நீர்மை விருப்பத்தின் பொருள் யாது?

27) இந்திய பொருளாதாரத்தின் ஏதேனும் ஒரு இயல்பினைக் கூறு.

28) குறு நிறுவனங்கள் - வரையறு.

29) 62 = 34+4x என்றால் x இன் மதிப்பு காண்.

30) மனித வளர்ச்சிக் குறியீட்டெண்ணைக் கணக்கிட உதவும் குறியீடுகளை கூறுக.

**பகுதி - இ**

**III. எவையேனும் 7 வினாவிற்கு ஒரு பத்தியில் விடையளிக்கவும். 7×3=21**

**வினா எண் 40 கட்டாயம் விடையளிக்கவும்.**

31) பணிகளின் பல்வேறு இயல்புகள் யாவை?

32) மனித விருப்பங்களின் இயல்பைக் கூறுக.

33) நிலத்தின் சிறப்பியல்புகள் யாவை?

34) AC மற்றும் MC எடுத்துக்காட்டுகளுடன் வரையறு.

35) இருவர் முற்றுரிமையின் இயல்புகள் யாவை?

36) இந்தியத் திட்டமிடுதலில் நேருவின் அணுகுமுறையை எழுதுக.

37) 1991 ஆம் ஆண்டுத் தொழிற்கொள்கையின் ஏதேனும் மூன்று நோக்கங்களைக் குறிப்பிடுக.

38) தமிழ்நாட்டின் கனிம வளங்கள் - குறிப்பு வரைக.

39) கணித முறையின் பொருளாதாரப் பயன்பாடுகளை விளக்குக.

40) பணத் தேவைக்கான நோக்கங்கள் யாவை?

**பகுதி - ஈ**

**IV. அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்: 7×5=35**

41) a) உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டைக் கொண்டு, பொருளாதாரத்தின் அடிப்படைப் பிரச்சனைகளை விவரி. **(அல்லது)**

b) பல்வேறுபட்ட விலை நிலைகளில் AR மற்றும் MR கோடுகளுக்கிடையேயான தொடர்பை விளக்குக.

42) a) குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதியை வரைபடத்துடன் விவரி. **(அல்லது)**

b) சில்லோர் முற்றுரிமையின் பண்புகளை விளக்குக.

43) a) விகித அளவு விளைவு விதியை உதாரணத்துடன் விளக்குக. **(அல்லது)**

b) கீன்சின் வட்டிக் கோட்பாட்டை விவரி.

44) a) இந்தியக் கனிம வளங்களின் முக்கியத்துவத்தை விவரி. **(அல்லது)**

b) ஊரக பொருளாதாரத்தின் பண்புகள் விசித்திரமானவை - விவாதி.

45) a) வணிக வங்கிகள் தேசியமாக்கப்பட்டதன் நோக்கங்களை விவரி. **(அல்லது)**

b) தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு வகையான ஆற்றல் வளங்களை விவரி.

46) a) 2015-2020ம் ஆண்டிற்கான ஏற்றுமதி-இறக்குமதி கொள்கையின் சிறப்பியல்புகளை விளக்குக. **(அல்லது)**

b) முற்றுரிமை போட்டியில் விலை மற்றும் உற்பத்தி அளவைத் தீர்மானிப்பதை வரைபடத்துடன் விளக்குக.

47) a) பொருளியல் துறையில் தகவல் தொழில்நுட்பங்கள் எவ்வாறு பயன்படுத்தப் -படுகின்றன? **(அல்லது)**

b) தேவை நெகிழ்ச்சியை அளவிடும் முறைகள் யாவை?

----------

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com